சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.313/2018

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | வயது | 55 |
| த/பெ | ராமசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | மணி நகர், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | வியாபாரம் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5, 6 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

நான் இந்த வழக்கை இறந்து போன 4 ம் பிரதிவாதி மோகன்தாஸ் என்பவர் மீது எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் தாவா சொத்து எங்களுடைய இடம் என்று தாக்கல் செய்து உள்ளேன். தாவா சொத்து எங்களுடைய இடம் என்று காட்டுவதற்கு ஏதாவது ஆவணங்கள் உள்ளதா என்றால் நாங்கள் அனுபவத்தில் உள்ளோம். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் 2 ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு பெற்று வந்தால் வருவாய் ஆவணங்களை திருத்தி தருவதாக கூறினார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் எதனை அவ்வாறு குறிப்பிடுகிறேன் என்றால் எங்களுக்கு தோராய பட்டா வழங்கும் போது குறைவான விஸ்தீரணத்திற்கு வழங்கியதை பற்றி நான் 2 ம் பிரதிவாதியிடம் கோரிய போது அவர் அவ்வாறு நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று வருமாறு கூறினார். இந்த விவரங்களை 2 ம் பிரதிவாதி எழுத்து பூர்வமாக தெரிவிக்க இல்லை என்றால் சரி தான். நான் இந்த வழக்கை பட்டா கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். 4 ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்க கூடாது என 1 முதல் 3 பிரதிவாதிகள்

மீது நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரி அல்ல. 4ம் பிரதிவாதியின் இடத்தில் உள்ள கேட்டை அப்புறப்படுத்த நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரி அல்ல. புறம்போக்கு நிலத்தை பொறுத்து அனுபவ பாத்தியத்தின் அடிப்படையில் விளம்புகை கோர முடியாது என்றால் சரி அல்ல. 5 முதல் 8 பிரதிவாதிகளை இந்த வழக்கு கட்டப்படுத்தாது என்றால் சரி அல்ல. புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து விட்டு நான் கோரியுள்ள பரிகாரங்கள் சட்ட படி செல்ல தக்கது அல்ல என்றால் சரி அல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி அல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/- G.Gengaraj,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.